இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு நிக்கதேமுவிடம் கூறியது: “தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை; ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். (‘யோவா 3:16-18)

# திருஅவை மற்றும் உலகின் சவால்களை எதிர்கொள்ளுங்கள் தயங்காதீர்!

மே 22, இத்திங்களன்று, பிற்பகல் திருப்பீடத்தில், இத்தாலிய ஆயர் பேரவையின் 77-வது பொது அமர்வில் பங்குபெறவுள்ள 200-க்கும் மேற்பட்ட ஆயர்களைத் திருப்பீடத்தில் சந்தித்தபோது இவ்வாறு உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தைக்கும் இத்தாலிய ஆயர்களுக்கும் இடையே ஏறத்தாழ மூன்று மணிநேரம் வெளிப்படையாகவும் அமைதியாகவும் நிகழ்ந்த இவ்வுரையாடலில், அமைதி, நிதி, சுற்றுச்சூழல், ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்களின் பணிகள் ஏழைகள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான பணிகள் குறித்தும் திறந்த உரையாடலை ஆயர்களுடன் நிகழ்த்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.



77-வது பொது அமர்வில் பங்குபெறவுள்ள ஆயர்களுடன் திருத்தந்தை

இறையழைத்தல்கள், குருமடங்கள் மற்றும் அருள்பணியாளர்களின் பணிகள் குறித்தும் ஆயர்களுடன் உரையாடிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எப்பொழுதும் போல, இவற்றில் அக்கறை செலுத்துமாறும் ஆயர்களைக் கேட்டுக்கொண்டார்

மே 22, திங்களன்று தொடங்கிய இத்தாலிய ஆயர் பேரவையின் பொதுஅமர்வு மே 25, வியாழக் கிழமையன்று நிறைவடைகிறது. "ஆவியானவர் தலத் திருஅவைகளுக்குச் சொல்வதைக் கேட்பது: பகுத்தறிவை நோக்கிய படிகள்" என்ற தலைப்பில் இது நடைபெறுகிறது.

மேலும், நற்செய்தி அதன் முழுமையில் வாழும்போது, நம்மை நாமே மாற்றிக் கொள்வதில் மட்டுமல்ல, மாறாக, அதை எல்லோருக்கும் பரவும் நம்பிக்கையாக மாற்றுவதன் வழியாக விசுவாச வாழ்விற்குச் சான்று பகர்கின்றோம் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், உள்நாட்டு மோதல்களால் பாதிக்கப்பட்டிருக்கும் சூடான் நாட்டில் அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஊக்குவிக்கவும், பல்வேறு துன்பங்களை அனுபவித்துவரும் உக்ரைன் நாட்டின் பக்கம் அனைவரும் ஒன்றிணைந்து எழுந்து நிற்கவேண்டும் எனவும் அழைப்புவிடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

சூடானில் போரிடும் தரப்புகள் தங்கள் ஆயுதங்களை கைவிடவேண்டும் என மிக ஆழமான விண்ணப்பம் ஒன்றை விடுத்த திருத்தந்தை அவர்கள், நாட்டில் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் எனவும், நாட்டு மக்களின் துன்பதுயரங்கள் விலகவேண்டும் எனவும் அனைத்துலக சமுதாயமும் உதவவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# ஆகஸ்ட் 5ஆம் தேதி பாத்திமா திருத்தலம் செல்கிறார் திருத்தந்தை

வத்திக்கான்: போர்த்துக்கல்லின் லிஸ்பனில் ஆகஸ்ட் மாதம் முதல் தேதி முதல் ஆறாம் தேதிவரை இடம்பெறவிருக்கும் உலக இளையோர் கூட்டத்தில் 2ஆம் தேதி முதல் 6ஆம் தேதிவரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கலந்துகொள்வது குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை உலக இளையோர் தினக்கொண்டாட்டங்களை முன்னிட்டு போர்த்துக்கல்லில் இருக்கும் திருத்தந்தை, 5ஆம் தேதியன்று பாத்திமா நகரின் மரியன்னை திருத்தலத்தைச்



பாத்திமா அன்னை - போர்த்துக்கல்

சென்று தரிசிக்க உள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு பனாமா நகரில் இடம்பெற்ற உலக இளையோர் தின இறுதி நாளின்போது, அடுத்த உலக இளையோர் தினக் கொண்டாட்டங்கள் 2022ஆம் ஆண்டு 2ஆம் தேதிமுதல் 7ஆம் தேதிவரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கோவிட் பெருந்தொற்றை முன்னிட்டு இது 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் வாரத்தில் இடம்பெறும் என 2020ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் தேதி அறிவிக்கப்பட்டது.

# பிரிக்பீல்ட்ஸ், புனித பாத்திமா அன்னை பங்கின் வைர விழா கொண்டாடப்பட்டது

கோலாலம்பூர். இங்கு பிரிக்பீல்ட்ஸ் பகுதியில் அமைந்துள்ள புனித பாத்திமா அன்னை பங்கு அதன் 60-ம் ஆண்டு வைர விழாவை கடந்த 2023 மே 13 ஆம் தேதி சனிக்கிழமையன்று மிகவும் விமரிசையாகக் கொண்டாடியது. பேராயர் ஜூலியன் லியோவின் தலைமையில், பங்குத்தந்தை வில்லியம் மைக்கேல், இப்பங்கின் உதவி அருள் பணியாளர் ஆண்ட்ரூ மாணிக்கம் மற்றும் இங்குள்ள பிரெஞ்சு சமூகத்திற்கு சேவையாற்றும் அருள்தந்தை ராபர்ட் ஆகியோர் விழா திருப்பலியைத் தலைமையேற்று கொண்டாடினர். இவ்வாண்டு இத்தேவாலயத்தின் 60 வது ஆண்டு வைர விழா என்பதால், இந்த விழா கொண்டாட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் அர்த்தமுள்ளதாகவும் உணரப்பட்டது.

அன்று, சிறப்பு செபமாலை, நவநாள் இறை வேண்டல்களுடன் நற்கருணை கொண்டாட்டம் தொடங்கியது. கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக, அருள்பணியாளர்கள், இறைமக்கள் பிரிக்பீல்ட்சில் ஏறக்குறைய ஒரு கிலோமீட்டர் தூரம் அன்னை பாத்திமாவின் அழகாக அலங்கரிக்கப்பட்ட சுரூபத்துடன் பவனி சென்றனர். இதைத் தொடர்ந்து ஆலயத்தில நற்கருணை ஆசீர்வாதம் நடைபெற்றது.

“நமது புனித அன்னையோடு அவரது மகனை நோக்கிய பயணம்” என்பது இந்த வைரவிழா கொண்டாட்டத்தின் கருப் பொருளாகத் தேர்வுசெய்ப்பட்டு, வழக்கம் போல ஒன்பது நாள்கள் நவநாள் மற்றும் திருப்பலி கொண்டாட்டங்களின் போது அழைக்கப்பட்ட அருள்பணியாளர்கள் தங்கள் மறையுரைகளுடன் இறைமக்களை வழிநடத்தினர்.

இந்த பங்குத் திருவிழாவும், பங்கின் வைரவிழாவும் இணைந்த இக்கொண் டாட்டம் இவ்வாண்டு சனவரி மாதம் தொடங்கி, பல்வேறு நிகழ்ச்சிகளால் சிறப்பு செய்யப்பட்டு கடந்த 13 மே அன்று நிறைவடைந்தது.



பிரிக்பீல்ட்ஸ், லிட்டல் இந்தியா பகுதியில் நீண்ட பவனி

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் ஓராண்டு மறைக்கல்வி உருவாக்கப்பயிற்சி நிறைவுபெற்றது

**கோலாலம்பூர்:** கடந்த ஜூலை 2022-ஆம் ஆண்டு மறைக்கல்வி ஆசிரியர்களுக்காக அடிப்படை உருவாக்கப் பயிற்சி கோலாலம்பூர் மாமறைமாவட்ட மேய்ப்புப் பணி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இப்பயிற்சியில் பங்குகளிலிருந்து பல மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கு பெற்று பயனடைந்தனர்.

கடந்த 10 மாத காலமாக தமிழில் பத்து தலைப்புகளைக் கொண்டு நடைபெற்ற இத்தொடர் பயிற்சி கடந்த 20-ம் திகதி மே மாதம் ஒரு நிறைவுக்கு வந்தது. இத்தொடரின் இறுதி பயிற்சியாக "வகுப்பறை மேலாண்மை" என்ற இங்கு விளக்கப்பட்டது.

இப்பயிற்சி பட்டறைக்கு நம் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் வருகை தந்து மறைக்கல்வி ஆசிரியர்கள் மேலும் இவ்வித உருவாக்க பயிற்சிகளில் கலந்து பயன்பெற ஊக்குவித்தார். இந்த அடிப்படை பயிற்சியின் இறுதி கட்டமாக, பங்கு பெற்ற அனைத்து மறைக்கல்வி ஆசிரியர்களுக்கும் கோலாலம்பூர் மாமறை மாவட்ட மேய்ப்புப்பணி மையத்தின் இயக்குனர் டாக்டர் ஸ்டிபன் செல்வராஜ் மற்றும் அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் அவர்களால் சான்றிதழ் வழங்கி



*ஓராண்டு தொடர் மறைக்கல்வி உருவாக்கப் பயிற்சியில் பங்குபெற்ற ஆசிரியர்கள்*

தலைப்பில் பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் குமாரி மாணிக்கம் சின்னப்பன் மிகச் சிறப்பாக வழிநடத்தினார். மனதளவிலும் உடல்ரீதியாகவும் வெவ்வேறு தனித்தன்மைகளையும் திறமைகளையும் கொண்டு இருக்கும் மாணவர்களை எப்படி வழிநடத்துவது, வகுப்பறை விதிமுறைகள், அட்டவணை திட்டம் மற்றும் பாடம் வடிவமைப்பு போன்ற அனைத்து விடயங்களையும் தெளிவுற விளக்கினார்.

"வகுப்பறை மேலாண்மை" என்பது மாணவர்கள் எவ்வித இடையூறுகளை விளைவித்தாலும் வகுப்பறை பாடங்களை சீராக இயங்குவதை மறைக்கல்வி ஆசிரியர்கள் தங்களின் செயல்முறைகளை உறுதி செய்து கொள்வதாகும். மாணவர்களை ஒரு பயனுள்ள ஒழுக்கம் மற்றும் கிறிஸ்துவில் நம்பிக்கைக்கொண்டு வளர ஊக்குவிக்கிறது என்ற கருத்தும் சிறப்பிக்கப்பட்டது.

'சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை' என்பதற்கேற்ப மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு இவ்வித பயிற்சி பட்டறைகள் தங்களின் கற்றல் திறனையும் அறிவாற்றலையும் வளர்த்துக் கொண்டு நல்ல ஒழுக்கமிக்க கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ மாணவர்களை உருவாக்க உதவுகின்றது என்றால் மிகையாகாது.

இந்த பயிற்சியை ஏற்பாடு செய்துக் கொடுத்த டாக்டர் ஸ்டிபன் செல்வராஜூ, அருட்சகோதரி ரீட்டா சவரியண்ணன் அவர்களுக்கும் மற்றும் இப்பயிற்சியை வழிநடத்திய ஒருங்கிணைப்பாளர் குமாரி மாணிக்கம் சின்னப்பன் அவர்களுக்கும் மறைக்கல்வி ஆசிரியர்கள் தங்களின் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைப் பெற்றனர்.

# அம்பாங், விண்ணேற்ற ஆண்டவர் சிற்றாலயத்தின் ஆண்டு திருவிழா கொண்டாடப்பட்டது

**கோலாலம்பூர்:** கடந்த மே மாதம் 18-ம் திகதி அகில உலக திருஅவை ஆண்டவரின் விண்ணேற்ற பெருவிழாவைக் கொண்டாடியது. இங்கு, அம்பாங் பகுதியில் அமைந்துள்ள ஆண்டவரின் விண்ணேற்ற சிற்றாலயமும் இப்பெருவிழாவை முன்னிட்டு மே திங்கள் 15-ம் நாள் தொடங்கி மூன்று நாள்களுக்கு அ.தி.ச. இறைமக்களால் புகழ்ச்சி ஆராதனை,



விழா திருப்பலியில் அருள்தந்தை பெடரிக் ஜோசப் அவர்களுடன் அருள்தந்தை கிளாரன்ஸ் தேவதாஸ்

நவநாள் இறைவேண்டல் மற்றும் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டது.

தொடர்ந்து வெள்ளிக்கிழமை தொடங்கி ஞாயிறுவரை நவநாள் இறைவேண்டலுடன் திருப்பலிகள் அருள்தந்தை பெடரிக் ஜோசப் அவர்களால் ''குடும்ப வாழ்வு' என்ற கருப்பொருளில் கொண்டாடப் பட்டன. அருள்தந்தையின் சிறப்பு மறையுரைகள் இறைமக்களின் நம்பிக்கை மற்றும் குடும்ப நல்வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் திடப்படுத்துவதாகவும் அமைந்தன.

சனிக்கிழமையன்று. இச்சிற்றாலயத்தின் இளையோர் ஒன்றுகூடி, அன்றைய திருப்பலிக்குத் தயார் செய்ததோடு அன்னையர் தினக் கொண்டாட்டத்திற்கும் சிறப்புற ஏற்பாடு செய்தனர். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை, மாலை மணி 5.30க்கு விழா திருப்பலிக்கு முன்பாக செபமாலை மற்றும் நவநாள் இறைவேண்டல்கள் இடம்பெற்றன. திருப்பலியின் உச்சமாக நற்கருணை ஆராதனையில் இறைமக்கள் தங்களை விண்ணப்பங்களை முன்வைத்து ஆண்டவரிடம் மன்றாடியது அனைவருக்கும் மிகுந்த மனநிறைவளித்தது.




2023-ம் ஆண்டுக்கான அணிச்சதை வெட்டுகிறார் பங்குத்தந்தை கிளாரென்ஸ் தேவதாஸ்

நிறைவாக, இவ்வாண்டுக்கான சிற்றாலயத்தின் திருவிழாவை மிகவும் சிறப்பாகவும் பொருள்மிக்க விழாவாகவும் கொண்டாட ஏற்பாடுகளைச் செய்த குழுவினருக்கு பங்குத்தந்தை கிளாரன்ஸ் தேவதாஸ் அவர்கள் நன்றி தெரிவித்த வேளையில், ஏற்பாட்டுக் குழுவினரும் திருப்பலிகளைக் கொண்டாடி, மறையுரைகள் ஆற்றிய அருள்தந்தை பெடரிக்ட் ஜோசப் அவர்களுக்கும் பங்குத்தந்தைக்கும் நன்றிமாலை சூட்டினர்.

*-கிறிஸ்தினா கெப்ரியேல், அம்பாங்*

**அடுத்த வாரம்**
**11 ஜூன் 2023**
**ஆண்டவரின் திருவுடல் திருஇரத்த பெருவிழா**



# அன்புருவான மூவொரு இறைக்குடும்பம்

"மூவொரு இறைவனின் ஒன்றிப்போடு இனைந்த மக்கள் இனத்தின் இணைப்பே திருஅவை" என்கிறார் தூய சிப்ரியோன். இன்று நாம் மூவொரு கடவுள் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். ஒவ்வொரு முறை இத்திருவிழாவைக் கொண்டாடும்போது நமக்கு மூவொரு இறைவனின் அன்பையும் ஒற்றுமையையும் பகிர்வையும் பணியையும் ஆற்றலையும் நமக்கு இப்பெருவிழா உணர்த்துகின்றது.

"நாம் நம்புகிற கடவுள் ஒரே கடவுள் ஆனால் மூன்று ஆள்களாய் இருக்கிறார்," இந்த நம்பிக்கை பல வேளைகளில் மறைப்பொருளாகத்தான் இருக்கிறது. காரணம் நாம் பிளவுப்பட்டவர்களாக இருக்கிறோம். "உயிரில்லாத உடல் போல் செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே" என்பார் புனித யாக்கோபு. நாமும் நம்முடைய வாழ்க்கையில் ஒன்றுபட்டிருந்தால் நாம் நம்புகிற கடவுள் மூவொரு இறைவன், நம்மில் பாகுபாடுகளும், வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும் இருக்கின்ற பொழுது நமது நம்பிக்கையும் மறைபொருளாகவே அமைந்துவிடும்.

இறைத்தந்தை உணர்த்தும் உடனிருப்பும், இறைமகன் வெளிப்படுத்திய தியாக அன்பும், தூய ஆவி பகிர்ந்த தோழமை உணர்வும் குடும்பங்களில் நிலைபெற்றிருந்தால் நமது குடும்பங்கள் மூவொரு இறைவனில் சங்கமமாகும். மூவொரு இறைவன் பெருவிழாவானது நமக்குத் தெரியாத கடவுளை நமக்குக் காண்பிக்க அழைப்பு விடுக்கின்றது. இந்த விழாவை நம்பிக்கை கோட்பாடு என்று மட்டும் எண்ணாமல், இது அனுபவம் என்று ஏற்றுக் கொண்டோம் என்றால், நாம் இந்த விழாவைப் புரிந்து கொள்ள முடியும். இந்த அனுபவ வாழ்விற்கு அழைப்பு விடுப்பது செப வாழ்வும் மற்றும் தியான வாழ்வும் ஆகும். நாம் இதை ஆழமாக விசுவாசிக்க நமக்கு இறைவெளிப்பாடு தேவை.

அறிவுக்கெட்டாத மறைப்பொருள் " நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன், இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன். (யோவான் 16:28 உண்மை தனை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும் பொழுது முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார் (யோவான் 16:13). எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள் (மத்தேயு 28:19) என்று மூவொரு கடவுளைப் பற்றி கிறிஸ்து நமக்கு வெளிபடுத்திய உண்மை. இன்றைய இரண்டாம் வாசகத்திலும் புனித பவுலடிகளார் மகிழ்ச்சியாயிருங்கள், நடத்தையைச் சீர்படுத்துங்கள், மன ஒற்றுமை கொண்டிருங்கள், அமைதியுடன் வாழுங்கள், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும் அன்பும், தூய ஆவியின் நட்புறவும் நம் அனைவரோடும் இருப்பார் என்பதை உறுதிபடுத்துகிறார்.

நற்செய்தியும் நாம் நிலைவாழ்வைப் பெறுவதற்குத் தம் மகனையே கையளித்த தந்தை, மகன் வழியாக உங்களுக்கு மீட்பு உண்டு அவர் மீதும் நம்பிக்கை வையுங்கள் என்று வெளிப்படுத்துகிறார். எனவே மூவொரு கடவுளை நாம் வரையும் சிலுவை அடையாளத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், அந்த மறையுண்மையை செயலாக்குவோம். நம் மூலம் மூவொரு இறைவனுக்கு உருவம் தருவோம். ஒருவர் மற்றவரோடும், குடும்பத்தினரோடும் நாம் நெருங்கி நிற்கும் உறவு நிலைக்கு முன்மாதிரியாக இருப்பவர் மூவொரு இறைவன் என்பதை பிறருக்கு வெளிப்படுத்துவோம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி, கெடா*

## மூவொரு கடவுள்

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | விப 34: 4b-6, 8-9 |
| தானி (இ) | 1: 29ac. 30,31. 32,33 |
| 2 வாசகம் | 2 கொரி 13: 11-13 |
| நற்செய்தி | யோவான் 3: 16-18 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- மூவொரு கடவுள்**